
தாம் ஆற்றிய பணிகளால்
தமிழர் வரலாற்றில் ஆழப் பதிந்துவிட்ட
மாமனிதன் இளங்கோவின்
மறைவில் துயருறும்
அவுஸ்திரேலியத் தமிழரின் ஆழ்ந்த அஞ்சலிகள்



27-01-2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயனே பிறவா இன்பம் அருளுக!

-நா. மகேசன்-

சைவமும் தமிழ் வளர்க்கச்
சலியாதே உழைத்த எங்கள்
கைவந்த வேந்தனார் இளங்கோ
கலாநிதி கவிஞன் ஆசான்
மெய்நெறி தவறா அன்பன்
மேவினான் சிவனார் பாதம்
ஐயனே பிறவா இன்பம்
அருளுக என்போம் இன்றே.

உற்றவர்க் குண்மை நண்பன்
உறுதுணை அன்பின் வள்ளல்
கற்றவர்க் கென்றும் தோளன்
கடமையை மறவாத் தீரன்
சொற்சுவை மிக்க தூயோன்
சோர்வினை வென்ற வீரன்
கற்பனை கடந்த சோதி
கண்டனன் என்போம் இன்றே.

தந்தையார் அடியை ஒற்றித்
தமிழ்க் கடல் மூழ்கியாடி
விந்தையாய் தமிழைச் சிறார்
விரும்பியே கற்றல் வேண்டி
வந்தஇன் நாட்டிற் கேற்ற
வளங்களைத் தேடி ஓடி
நொந்ததன் உடலை வீசி
நுகர்ந்தனன் இன்பம் இன்றே.

மனைவியார் மக்கள் தாயார்
மற்றுள உறவின் மாந்தர்
நினைவினை இழந்தார் போல
நின்றுளம் நெக்கி ஏங்க
அனைவரும் கூடி நாங்கள்
ஆறுதல் சொல்வோம் ஆனால்
தினையினின் பாகம் தானும்
தேறுதல் வருமோ அந்தோ!

சந்தையின் கூட்டம் அன்ன
சம்சார வாழ்வு தன்னில்
வந்தவர் போவார் மேலும்
வருதலை வேண்டா அன்பில்
முந்துவார் தங்கள் ஆன்மா
முத்திப் பேறெய்ய வேண்டிப்
பிந்துவார் சுற்றம் சூழப்
பெருமானை வேண்டி நிற்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் துடிக்குதையா!

- அம்பி -

வேந்தனார் இளங்கோ தமிழின்
வீறுகொண் டுழைத்த சான்றோன்
சாய்ந்தனன் என்றார் ஐயோ!
தமிழ்மனம் துடிக்கு தையா!
ஓய்ந்ததா அவனின் பேச்சு?
உறைந்ததா அவனின் மூச்சு?
ஆய்ந்தவன் பணிகள் எண்ணி
அமைதிகொள் ஏழை நெஞ்சே!

ஆவலோ டெங்கும் சென்று
அருந்தமிழ்ப் பணிகள் செய்தான்!
நாவலன் ஆகி எங்கள்
நற்றமிழ் ஏவல் செய்தான்!
பாவலன் பாவால் எங்கள்
பைந்தமிழ்ப் பணிகள் செய்தான்!
காவலன் போல வாழ்ந்த!
கவிஞனே! எங்கு சென்றாய்?

பாலரின் மொழியில் எங்கள்
பாமரக் கெழுதி ஞான
சீலரின் கருத்தை எங்கள்
சிறுவருக் கெழுதி ஈற்றில்
காலனார் கரங்கள் நீட்டிக்
கழுத்தினிற் பிடித்த போதும்
ஆவலாய்த் துடித்தாய் உன்தன்
அரும் பணிதொடர...அந்தோ!

நற்பணி நாளுஞ் செய்தாய்
நமர்க்கென வாழ்ந்தாய் அந்தப்
பொற்பதம் எண்ணி வாழ்ந்த
பொறியியற் குருவே! ஆமாம்
கற்க நீர் கசடே இன்றிக்
கனிதமிழ் வாழச் சேவை
பற்பல செய்க என்றாய்...
பணிகளைத் தொடர்வோம்...ஐயா!

கையிலே பிடித்து நம்பி
வந்தஅக் கலாவும் பெற்று
மெய்யென நம்பி வாழ்ந்த
நற்சிசு மூன்றும் எல்லாம்
பொய்யெனில் நம்பா துள்ள
பெற்றவள் உடன் பிறந்தார்...
ஐயனே...அதையும் எண்ணி
அகமிகத் துடிக்கு தையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேகம் காட்டியதேன் இளவேந்தே?

**த**மிழ்மீது தான் கொண்ட ஆராக்காதலினால் தலைமகற்கு
இளங்கோ எனப் பெயரிட்டார் உன் தந்தை.
இவன் தந்தை என்னோற்றான்? என, வியன் உலகு வியந்திருக்க
தமிழ் செய்தாய்! இக்கண்டத்தில் தமிழ் வாழ வழி செய்தாய்.
நீயே ஒரு கவிஞன். உனக்கு கவிதையிலே மடலெழுத
யான் கற்ற கல்வி போதவில்லை.
இது கவிதையல்ல, ஒரு கடிதம்!
இது கடிதமும் அல்ல, என் உளத்தெழுந்த துயரம்!
அதைத் தொகுத்தெழுத வார்த்தைகளைத் தேடுகின்றேன்.

**அ**றிஞர் ஔவை நடராசன் உனை விழித்து
'வேந்தனாரின் இளங்கோவா? நீயே ஒரு தமிழ் வேந்தே!'
என வியந்துன்னைப் போற்றியதும்,
இளங்கோ இருக்கும்வரை உன் தமிழிற்குக் குறைவில்லை
என்று எனை நோக்கிச் சொன்னதுவும் நினைவிலுண்டு.

**இ**ன்தமிழை எஞ்ஞான்றும் உயிர்மூச்சாய் நேசித்தாய்!
என்றும் நீ அவுஸ்திரேலியத் தமிழ் இனத்தின் இளம் கோவே!
அன்றொருநாள் நிகழ்ச்சியொன்றில் பேசவேண்டும் எனக் கேட்டேன்.
உன்னுடலை இருமல் என்ற போர்வையிலே பாதகனாம்
கொடுநோய் வருத்தி நின்ற போதினிலும்
என்ன சொன்னாய்?
தமிழ் அமுதைப் பேசுவதும் கேட்பதுவும் தானே
நோய்கட்கு அருமருந்து என்று உரைத்து
பட்டிமண்டபம் ஏறினையே ஐயா!
பார்முழுதும் பெருதுவக்கப் பேசினையே!

**மே**டைகளில் நீ பேசுகின்ற போது வரும் தமிழ் வேகம்!
உன் கம்பீரக் குரல் கேட்டு நான் சிலிர்த்திருப்பேன்.
அதனூடு உன் தமிழ்க் காதல் தனைத் தெரிந்து மகிழ்ந்திருப்பேன்.
அதில் ஊறிவரும் தமிழ்த் தேனை வகை தெரிந்து அனுபவிப்பேன்.
இனி அந்த நாளை நான் எங்கே ஐயா காண்பேன்.

**செ**ன்ற ஆண்டு ஐப்பசியில் ஓர் நாள்
உன்னில்லத்தில் நாம்!
கைத்தடி பிடித்து நடந்துவந்தாய்!
உடல் தளர்ந்த கோலமது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கலங்கி நின்ற வேளையிலும்
புன்சிரிப்பை வரவழைத்து 'எப்படி?' என
எம்நலத்தைக் கேட்டிட்டாய்.
முன்நடப்பை மீட்டெடுத்து தமிழ்க் கல்வி தொடர்பாக
'என்ன, என்னவென' அத்தனையும் சொல்லிவைத்தாய்.
மூச்சிரைக்க மூச்சிரைக்க நீ பேசுகின்றாய்.
புரியாது என்றெண்ணி ஒவ்வொன்றாய் விளக்குகின்றாய்.
போதும் இனி என்று சொல்வதற்கும் துணிவில்லை
பேசுங்கள் என்று கேட்பதற்கும் மனசில்லை.
பேசாப்பதுமையாக நான்!
நீ சொன்னதெல்லாம் உள்ளமதில் பொறித்து வைத்தேன்.
ஐயா! உள்மனதில் பொறித்து வைத்தேன்.

ஒரு வார்த்தை சொல்லாமல் இன்று எங்கு சென்றனையோ?
என்றும் கலங்கரை விளக்காக நீ நின்றாய்.
உனை நம்பி பாதி வழி தூரம் ஆழ்கடலில் வந்துவிட்டோம்.
மீதி கடப்பதற்கு என்ன வழி?
இப்போது மட்டும் ஏனிந்த வேகம்?
எங்கே சென்றாய் ஐயா!
உன் ஒளியை நினைத்து நாம் கரை நோக்கி நகர்கின்றோம்.
நீ விட்ட இடத்தில் இருந்து தொடங்குகின்றேன்.
என்றும் தமிழ்க் கல்வியில் வழித்துணையாய், விழித்துணையாய்
வரவிருக்கும் பழித்துணையாய் நீ என்னைப் பார்த்திருக்கவேண்டும்.
வாய்ப்பு வந்த போதெல்லாம் உனை வாய்நிறைய வாழ்த்தி நின்றேன்.
இன்றோ வணங்கி நின்றேன்.

இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்பதும்
மண்முதல் பூதங்கள் மாயும் என்பதும்
அறிவுக்குத் தெரிகிறது. உணர்விற்குப் புரியவில்லை.
உன் பிரிவு என் அறிவுக்கும் புரியவில்லை ஐயா!

தினமும் நின் வரவிற்காய் திசைபார்த்து நிற்கின்றேன்.

திரு திருநந்தகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளுக்கு மரணமில்லை

எழுத்தாளர் விழா 2005 நிகழ்ச்சிகள் நிறைவுற்று புறப்படும் தறுவாயில் நண்பர் பாஸ்கரன் தெரிவித்த அதிர்ச்சியான செய்தி என்னைப் பெரிதும் வருத்தியது.

எமது அருமை நண்பர் கலாநிதி வேந்தனார் இளங்கோ சிட்னியில் மேற்கொண்ட தமிழ்ப்பணி விதந்து போற்றுதற்குரியது.

சில மாதங்களுக்கு முன்னர் சிகரம் தொலைக்காட்சியில் இளங்கோ அவர்களின் தமிழ்க்கல்விப்பணி தொடர்பான கருத்துக்களை கேட்டேன். உடனே அவருக்கு வாழ்த்தும் தெரிவித்து கடிதம் எழுதினேன்.

இளங்கோ கவிஞராகவும் ஆய்வாளராகவும் அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழச் சிறார்களுகளின் (சிட்னியில்) ஆசிரியராகவும் நன்கு அறியப்பட்டவர். இளங்கோவின் மறைவு ஈடுசெய்யப்படவேண்டிய இழப்பாகும்.

2002 ஆம் ஆண்டு எமது இரண்டாவது எழுத்தாளர் விழா சிட்னியில் நடைபெற்றவேளையில் இளங்கோ கடினமாக உழைத்தார். விழா கருத்தரங்கு, கட்டுரைகளைத் தொகுத்து தனி நூலாக வெளியிட ஆக்கபூர்வமாக பணியாற்றினார்.

அவர் நோயுற்றபோது சுகமடைய வேண்டுமென பிரார்த்தித்து மடல் அனுப்பினேன். எனினும், அவர் விடைபெற வேண்டியதாகிவிட்டது.
தற்போது
இளங்கோவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்க வேண்டியதாகிவிட்டது.

அவரது பிரிவால் வாடும் துணைவியார், பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இளங்கோ தொடர்பான நினைவுகளுக்கு மரணமில்லை.

லெ. முருகபூபதி
மெல்போர்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.**
**P O Box S102, Homebush South NSW 2140**
**ABN: 84 778 609 835**

**Member Schools**

Ashfield:- Balar Malar

Auburn:- Tamil Aalayam

Denistone: Balar Malar

Eastwood:- Tamil Study Centre

Homebush:- Tamil Study Centre

Holsworthy: Balar Malar

Mt. Druitt: Tamil Study Centre

Seven Hills: Balar Malar

Wollongong: Tamil Study Centre

# கண்ணீர் அஞ்சலி

## இளங்கோ! எண்ணிப்பார்க்க முடியாத பேரிழப்பு

ஆழிப்பேரலையின் அவலத்தை தமிழுலகம் அனுபவிக்கும் இக்காலத்தில் மீண்டும் ஓர் இழப்பினை நினைத்துப்பார்க்க முடியவில்லை. எங்கள் இளங்கோவை நாம் ழந்துவிட்டோமா? நம்ப முடியவில்லைஇநம்ப முடியவில்லை.

தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பின் வரலாற்றில் இளங்கோ ஒரு தனி அத்தியாயம். அந்த வரலாற்றில் இளங்கோ இல்லாத பக்கங்களே இல்லை.

பாடசாலைகளை இணைத்து செயலாற்றுவதிலாகட்டும், பாடத்திட்டங்களோடு இணைந்த பாடநூல்கள் ஆக்குவதிலாகட்டும், தமிழ் மொழியில் மாணவர் தகமை பெறுவதற்காய் புலமைச் சான்றிதழ் பரீட்சையை வடிவமைப்பதிலாகட்டும், நிதியாதாரம் தேடுவதிலாகட்டும், இளங்கோவின் கை படாத செயற்திட்டங்களே இல்லை. ஆரம்பத் தமிழ்க்கல்வியை கணினிமயப்படுத்தி வழி செய்திருந்தார். எல்லோரும் ஒன்றாக செயற்பட வேண்டுமென பேச்சிலும் மூச்சிலும் நினைத்திருந்தார். ஆசிரியர்களின் இணைப்புப் பாலமாக இருந்து அரும்பணியாற்றினார்.

தனியருவராக அவர் செய்தவற்றை இன்று எண்ணிப்பார்த்தால் பிரமிப்பாக இருக்கிறது. இனி யார் அவர் இடத்தை நிரப்பமுடியும்? அவரின் மறைவு தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்புக்கு பேரிழப்பு.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் தமிழ்க் கல்வி இருக்கும்வரை கலாநிதி வேந்தனார் இளங்கோவின் புகழ் நிலைக்கும்.

அவரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அவரின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

**நியூசவுத்வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**
27.01.2005

"திரை கடலோடினும் தீந்தமிழ் பேணுதும்"

Mr KG Bascaran
**President**
Tel: 02- 9746 0567
Email:kbascaran@lanecove.nsw.gov.au

Mr G Meganathan
**Secretary**
Tel: 02-9649 1552
Email:gmeganathan@hotmail.com

Mr K Ragavan
**Treasurer**
Tel: 02-8711 6148
Email:kane@almark.com.au

Mr M Arjunamani
**Vice President**
Tel: 02-8746 0635
Email:mani@fast.fujitsu.com.au

Mr K Selvakumar
**Assistant Secretary**
Tel: 02 – 9763 2292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுத் துளிகள்.............

## அமரர், கலாநிதி இளங்கோவும் -
## வென்ற்வேர்த்வில் தமிழ்க்கல்வி நிலையமும்

சங்கம் வளர்த்ததமிழ் சான்றோர்கள் போற்றும்தமிழ்
மங்காமல் தழைக்கஇந்த மாநிலத்தே சேர்ந்துற்ற
வேந்தனின் மைந்தனாம் கலாநிதி இளங்கோ,
சாந்தமாய் சரணடைந்தார் சர்வேஸ்வரன் திருவடியில்

ஊர்காவற் றுறைமண்ணில் வந்துதித்த இளமைந்தன்
பேர்பெற்ற இராமனாதன் பெருமையுடன் தோற்றுவித்த
பரமேஸ்வராக் கல்லூரியில் பாலர்கல்வி பயின்றதுவும்
பார்புகழும் யாழ்இந்துக் கல்லூரி யதுதன்னில்
சீர்பெறு உயர்கல்வி கற்றத னால்தானோ
புலம்பெயர்ந்ந நாட்டினிலும் எம்முயிராம் தமிழ் வாழ
பேரவாக் கொண்டுழைத்த பேரன்பர் வரிசையிலே
பாலமாய்த் திகழ்ந்திட்டார் அமரர் இளங்கோ.

கண்ணிமைக்கும் பொழுதினிலே, பலவேலை செய்துவிடும்
மின்னியல் துறைதன்னைத் தமக்காகத் தேர்தெடுத்து
பொறியியலாளராக "மொரட்டுவ"யில் பட்டம் பெற்றும்
அறிவுதனை உயர்த்தஎண்ணி ஜேர்மனியைச் சென்றடைந்தார்
கடமையே கண்ணாகத் திடமாக உழைத்ததனால்
"கலாநிதி இளங்கோ"வாய் ஞாலத்தில் புகழ்பெற்றார்,

"வொலங்கொங்" சர்வகலாசாலையில்
விரிவுரையாளர் ஆயிருந்தும்
பொன்னானதன் நேரமதை
வீணடிக்க விரும்பாமல்
தமிழ்ப்பணிக் காகத்தம்மை
அர்ப்பணித்த ஆசானை
இன்று நாம் தேடுகின்றோம்!
நினைவுத் துளிகளூடே.

உயர்தரப் பரீட்சையிலே தமிழையோர் பாடமாக்க
அயராது (உ)ழைத்தவர் என்பதற்கு சான்றாக
அன்னாரின் ஐம்பதாம் பிறந்த நாளன்று
பொன்னாரம் சூட்டுதல்போல் அமைந்ததோர் நிகழ்வது
அன்றுதான் கிடைத்தன முதற்-பரீட்சை முடிவுகள்,
கண்டார்! களிப்புற்றார்! காரணரானார்! - அன்னாரை
இன்று நாம் தேடுகின்றோம்!
நினைவுத் துளிகளூடே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றுவேர்த்வில் தமிழ்க் கல்வி நிலையம் பெருமையுடன் நினைவுகூரும் நிகழ்வுகளிற் சில:

- ❖ "தமிழ்த் திறமைகாண் பரீட்சைகளை" நடாத்தியமை
- ❖ NSW அரசாங்க கல்வி முறைக்கேற்ப பாடத்திட்டம் வடிவமைத்தமை
- ❖ தமிழ் ஆசிரியர்க்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியமை
- ❖ தமிழ்ப்பாடசாலைகள் ஒன்றுகூடும் கலைவிழாக்கள், நாடக விழாக்கள், விளையாட்டுப்போட்டிகளை முன்னின்று நடாத்தியமை
- ❖ "பல்லின மொழி" மாநாட்டில் (Languages the Millennium - Conference) தமிழ் மொழியைப் பிரதிநிதித்துவப் படுத்தியமை
- ❖ "தமிழ்" பாடப்புத்தகங்கள் தயாரிப்பில் முன்னோடியாகத் திகழ்ந்தமை
- ❖ பட்டிமன்ற மேடைகளில் சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தமை.

இவை மட்டுமல்ல,

சென்ற ஆண்டின்
செப்டெம்பர் நான்காம் நாளில்
வென்றுவேர்த்வில் தமிழ்க்கல்வி
நிலையத்தின் கலைவிழாவில்
அன்னார் ஆற்றிய சிறப்புரை
தமிழன்பர்க்கு, அவர் இறுதியுரை.

அமரர், கலாநிதி இளங்கோ

நண்பனாய், மந்திரியாய்,
நல்லாசிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்,
பார்வையிலே சேவகனாய்
அன்பான நெஞ்சங்களில்
என்றென்றும் உறைந்திடுவார்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TAMIL CO-ORDINATING COMMITTEE- SYDNEY OFFICE**

**தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - சிட்னிப் பணியகம்**

**57 Boorea Street, Lidcombe, NSW 2141**

Phone: +61 (0)2 9702 1822 Fax: +61 (0)2 9702 2822 e-mail: tcc.sydney@optusnet.com.au

கலாநிதி வேந்தனார் இளங்கோவின் மறைவு கேட்டு பெரிதும் வருந்துகின்றோம். அவரது இழப்பினால் தவிக்கும் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் அன்பையும் தெரிவிக்கின்றோம்.

சிட்னிவாழ் தமிழ்ச்சமூகம் நல்லதொரு தமிழ் தொண்டனை இழந்து நிற்கின்றது. தமிழ் பயிலும் மாணவர்கள் நல்லதொரு ஆசானை இழந்து விட்டார்கள். தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் நல்லதொரு இலக்கியத் தோழனை இழந்து விட்டார்கள்.

மொழி ஒரு இனத்தின் அடையாளம். அந்த மக்களின் பாரம்பரியத்தைஇ பண்பாட்டைஇ வாழ்வியற் கோலங்களை வெளி□ப்படுத்தும் குறியீடு. அந்த மொழியைஇ புலம் பெயர்ந்து வாழும் சூழலில் எமது பிள்ளைகளுக்கு பயிற்றுவிப்பதில் கலாநிதி இளங்கோ ஒரு முன்னோடியாக இருந்து ஆற்றிய சேவைகள் பல. அந்த சேவைகளின் விளைவுகளை எம்மக்கள் இன்று இங்கு அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிட்னியில் இடம்பெற்ற பல இலக்கிய மேடைகளில் இளங்கோவின் குரலைக் கேட்டவர்கள் அவர் இழப்பால் தவிப்பார்கள் என்பது நிச்சயம்.

வேந்தனார் இளங்கோவின் பிரிவால் வாடும் அனைவருடன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரும் கலந்து கொண்டு எமது ஆழ்ந்த வேதனையைத் தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்
# கண்ணீர் அஞ்சலி

கலாநிதி
வேந்தனார்
இளங்கோ



சிவபதம்
எய்தியமை
22.01.2005

## ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையமும் மறவாதே!!!

நேர்மைக் குணத்தோனே நேசமிகு இளங்கோவே
ஊருக் குழைத்தவனே உத்தமனே வித்தகனே
வேந்தனார் பெற்றெடுத்த விலையில்லா இரத்தினமே
போந்தனையோ தமிழ்மறந்து புண்ணியனார் அடிசேர!

பள்ளிச் சிறுவருக்குப் பாதை வகுத்தமைத்து
துள்ளும் தமிழ்நடையில் துலக்கமாய் நீபேசி
சிட்னியிற் தமிழையொரு தேசியப் பாடமாக்க
கட்டுப் பலசுமந்த கடதாசி மறந்தனையோ!

பேசுந் தமிழுனக்குப் பிறப்போடு வந்ததென்பாய்
வீசுந் தென்றலென விளக்கமாய்ப் பேசிடுவாய்
"நானோய்ந்து போனாலும் நாவோயா" தென்றிடுவாய்
தானோயாத் தமிழையின்று தவிக்கவிட்டுப் போனதேனோ?

பாடநூல் ஆக்குகின்ற பள்ளிகள் கூட்டமைப்பில்
தேடக் கிடைக்காத திறமையொடு செயலாற்றி
வீட்டை மறந்துவிட்டு வினைத்திறனே கண்ணாக
நாட்டிய திட்டங்கள் நலியநீ போனதேனோ?

கவிகள் பலகட்டிக் கருத்தரங்கு பலபுகுந்து
செவிகள் நிறையஎங்கள் சிந்தனையைத் தூண்டிவிட்டு
ஆய்வுகள் பலசெய்து ஆசானாய் நீஉயர்ந்த
ஓய்வு ஒழிவில்லா உழைப்புன்னை மடக்கியதோ?

கலாநிதி என்கின்ற கர்வம் சிறிதுமின்றி
எலாரும் வாழ்கவென்ற இறைபக்தி உணர்வோடு
முரண்பாடு வந்துவிட்டால் முன்னின்று நீபேசி
அரண்செய்தாய் ஒற்றுமையை அதற்கிங்கு யாருளரோ?

நெடுந்தொலைவில் நீயிருந்து நித்தம்சனி தவறாது
கடும்பனியோ வெய்யிலோ காரோட்டி ஹோம்புஷ்வந்து
நெடும்பொழுது நீசெய்த நிகரில்லாத் தமிழ்ச்சேவை
தடுத்தஅந்தத் தற்பரனார் தயவற்றுப் போனதேனோ?

மனைவிமக்கள் உறவினர்கள் மாண்புடைய நண்பர்பலர்
உனைநினைந்து உளம்நொந்து உருக்குலைந்து
தவிக்கையிலே
அஞ்சாத நெஞ்சுடனே ஆண்டவனை நினைந்தபடி
துஞ்சினையோ ஐயா துயருனக்கு இனியேது!

நித்தம் நடந்தவழி நெருஞ்சி படருதென்பார்
வித்தகனே தத்துவனே வேந்தனார் இளங்கோவே
நாம்மறவோம் உன்பெருமை நமதுகல்வி நிலையமாம்
ஹோம்புஷ் தமிழ்கல்வி நிலையமும் மறவாதே.

**தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்**
22.01.2005

நா.மகேசன்

www.tsch.org.au

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிக்கோ இறந்துவிடவில்லை

இளங்கோ
தந்தை உனக்கிட்ட பெயர் அது
நீயோ இளம் கோ வாகஇருந்தாய்
தமிழ்க்கோவாய், கவிக்கோவாய்
கவியரங்கில் காட்சிதந்தாய்

தமிழாராச்சி மாநாட்டு மண்டபத்தில்
சிட்னி மேடையிலே நாம் அமர்ந்திருந்தோம்
கவிஞர் அம்பி தம்பியென்றழைக்க
நீ எழுந்து கவிதை மழை பொழிந்தாய்
அது கவிதையல்ல
பிள்ளைகளை தமிழார்வம் கொள்ளவைக்கும்
உன்கனவு.
கனவு பலிப்பதில்லை நீ கண்டது பலித்தது
இன்று உயர்தரத்தில் தமிழ்வகுப்பு
உன்பேர்சொல்லி நிற்கிறது.

தமிழுக்கு நீ சேவை செய்தாய்
தமிழ் உன்னிடம் கைகட்டி சேவகம் செய்கிறது
கவியரங்குகளும் பட்டிமன்றுகளும்
நீயின்றி இருந்ததில்லை
தமிழ் நீ இழுக்குமிடமெல்லாம்
ஏறி இறங்கிவந்து அமர்ந்து கொள்கிறது
நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன்

சுனாமியால் துவண்டிருந்த தமிழர்
சுதாகரித்து எழும்புகின்றபோது
இளங்கோ நீ மறைந்த செய்தி
மற்றுமொரு அலையாய் வந்து
இதயத்தில் அடித்துச்சென்றுவிட்டது
தமிழர் கூடும் இடமெல்லாம்
காற்று முகாரி இசைக்கிறது
உன்பிரிவால் பூமி மட்டும் அழவில்லை
வானம்கூட கண்ணீர்விட்டு அழுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீருக்கு ஏங்கிய போதெல்லாம் பெய்யாத மழை
நீ இறந்த நாளிலிருந்து இன்றுவரை
கொட்டிக்கொண்டிருக்கிறது
இயற்கைகூட தன்சோகத்தை இறக்கிவைக்கிறதா?
இளங்கோ நீ புகழ் விரும்பாது
பொதுத்தொண்டாற்றியிருந்தாய்
தமிழ்சமூகமே இன்று உன் புகழ்பாடுகின்றது
உன்மரணத்தில்கூட மற்றவர்களுக்கு
பாடம் சொல்லிக் கொடுத்திருக்கின்றய்

எழுத்தாளர் விழாவிலெல்லாம் கவிதைபாடினாய்
அதே நாளைத்தான் இறப்பதற்கும் தேர்ந்தாயா
நீ இறந்துவிட்டாய் என்று நான் கலங்கவில்லை
நியாயத்திற்காய் ஒலிக்கும் குரலொன்று
நின்று விட்டதற்காய் அழுகின்றேன்
உன்முகத்தில் என்நேரமும் சிரிப்பைப் பார்த்திருக்கின்றேன்
தப்புச் செய்தவரை தட்டிக்கேட்கும் போது
உன் கோபத்தையும் பார்த்திருக்கின்றேன்
எவருக்கும் வளைந்து கொடுக்காமல் நிற்பாயே
ஏன் இப்போமட்டும் சாவிற்கு தலைவணங்கி விட்டாய்

நீ இறந்துவிடவில்லை
எங்கள் இருதயத்தின் துடிப்பினிலும்
இலக்கியத்தின் நயங்களிலும்
நீ வாழ்வாய்

செ.பாஸ்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்னி தமிழ் அறிவகம்
SYDNEY TAMIL RESOURCE CENTRE INC
LOCATION: 54, THE CRESCENT, HOMEBUSH. PHONE (02) 97644122
POSTAL ADDRESS: P.O.BOX S420 HOMEBUSH NSW 2140
ABN No: 29 264 616 625 Website: http://www.tamilresourcecentre.org

# கண்ணீர் அஞ்சலி
# அமரர் கலாநிதி வேந்தனார் இளங்கோ

அமரர் வேந்தனார் இளங்கோ அவர்கள் பாடசாலைப் பருவத்திலிருந்து தனது வாழ்க்கையின் இறுதிநாட்கள் வரை தமிழ்மொழியின் மீதுகொண்ட பற்றினால், தமிழ்ச்சமூகத்திற்கு செய்த சேவைகள் அளப்பரியவை. கட்டுப்பத்தை பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தில் எட்டு வருடங்கள் மாணவராகவும், விரிவுரையாளராகவும்இ கலாநிதிப் பட்டப்படிப்பின்போது ஜெர்மனியிலும்இ கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக சிட்னியிலும் அன்னாரது கவிதைகளையும், பட்டிமன்ற விவாதங்களையும்இ சிறப்புரைகளையும் கேட்டு வியக்காதோர் யாருமில்லை.

அவரது தமிழ்பற்று அவுஸ்திரேலியாவிற்கு வந்தும் அவரை விட்டு விடவில்லை. அந்த இனிமையான மொழியின் மேல் தான் கொண்ட காதலை தன் பிள்ளைகளும் கற்றுணர்ந்துஇ அவர்களுக்கும் தமிழ் மொழியின் தன்மையைஇ இனிமையை விளங்கவைப்பதற்கென்ற ஆர்வத்துடன் கிட்டத்தட்ட நூறு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள வொலொங்கொங்கிலிருந்து ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்திற்கு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் வரத் தொடங்கினார்.

ஒரு சில மாதங்களில் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தில் கலாச்சாரப் பிரிவையும் தொடர்ந்து கல்விப் பிரிவையும் பின்னர் தலைமைப்பதவியையும் பொறுப்பேற்றுஇ தனது பல வருட கால கற்பித்தல் அனுபவத்தின் மூலம் பல புதிய இலகுவான வழிகாட்டல்களைக் கையாண்டு மாணவர்களையும் ஆசிரியர்களையும் கவர்ந்திழுத்தார். புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் சிறுவர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு தகுந்த பாடப் புத்தகங்கள் தேவையென உணர்ந்து அவுஸ்த்திரேலிய சூழ்நிலைக்கேற்ப பாடப் புத்தகங்களை உருவாக்குவதிலும் பாடத்திட்டங்களை வகுப்பதிலும் ஆசிரியர்களுக்கான பட்டறைகளை நடாத்தி அவர்களுக்கான வழிகாட்டல்களை உருவாக்குவதிலும் ஈடுபட்டு வெற்றி கண்டார். உயர்தர வகுப்பு மாணவர்கள் தமிழை ஒரு பாடமாக எடுப்பதற்கு கல்வி அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்று கடந்த நான்கு வருடங்களாக ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றி அதி சிறந்த பெறுபேறுகளை பெறுவதில் ஆவன செய்தலிலும் இவரின் பங்கு உயர்ந்து நிற்கின்றது.

கலாநிதி இளங்கோ அவர்கள்இ சிட்னி தமிழ் அறிவகத்தின் அங்கத்தவராக இருந்து அறிவகத்தின் வளர்ச்சியில் ஆலோசனைகளை வழங்கி அறிவகத்திற்குத் தேவையான புத்தகங்களைப் பெறுவதில் பெரும் பங்காற்றினார். அன்னாரது சேவை இத்துடன் நின்றுவிடாமல் தமிழ்ப் பாடசாலைகளின் கூட்டமைப்புஇ வொலங்கொங் தமிழ்க் கல்வி நிலையம்இ யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்இ தமிழ் இலக்கியப் பவர்இ ஹெலன்ஸ்பேர்க் வெங்கடேஸ்வரர் ஆலயம் போன்ற பல சமூக அமைப்புக்களிலும் பொறுப்பான பதவிகளை வகித்து பல பணிகளைப் புரிந்துள்ளார்.

ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுவிழாவின் போது அவர் உரையாற்றுகையில் இப்பாடசாலை வெள்ளி விழா கொண்டாடிஇ வைர விழாவைக் கொண்டாடும் போதுஇ குடு குடு கிழவனாக தான் வருகைதருவதாகக் கூறியிருந்தார். ஆனால் காலனோ அவ்வாக்குறுதியை நிறைவேற்ற விடவில்லை.

அன்னாரது சேவையையும் வழிகாட்டலையும் இனி எங்கே எப்போ பெறப்போகின்றோம் என்று தமிழர்களாகிய நாங்கள் இதயம் துவண்டு கண்ணீருடன் தவித்து நிற்கின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

க.சபாநாதன்
சிட்னி தமிழ் அறிவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

கலாநிதி வேந்தனார் இளங்கோ அவர்களது சுகவீனம் அறிந்து துயர் கொண்டோம், நாம் அன்று. இன்று அவரது பேரிழப்பை அறிந்த பெருந்துயரில் ஆள்ந்துள்ளோம். அவரின் அயராத சேவை மனப்பான்மை, அன்பான சுபாவம், தமிழ் மொழி ஆற்றல், பேச்சு வன்மை என்பன, சிட்னித் தமிழ் மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்றவை. கலாநிதி வேந்தனார் இளங்கோ அவர்கள், சிட்னிப் பல்கலைக்கழக மாணவர்களின் நடவடிக்கைகளை ஊக்குவித்தும், வழிநடத்தியும் வந்துள்ளார்.

சுகவீனமுற்றிருந்த வேளையிலும், எமக்கு வழிகாட்டிய உத்தமன். தனது விதியை நன்கு அறிந்தும், கேட்போருக்கு எல்லா உதவியும் ஆலோசனைகள் வழங்கிய பெருமகன். இந்த வகையில், எமது அழைப்பை ஏற்று, Unifund கலைக்கதம்பம் 2004 என்ற எமது நிகழ்ச்சியில், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கான பரிசுகளை தானே மணவர்களுக்கு வழங்கி கௌரவித்தார். கலப்பை காலண்டுச் சஞ்சிகைக்கு பல ஆக்கங்களை எழுதிய இவர், பல வழிகளில் எமக்கு ஊக்கத்தையும் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படியாக பல வழிகளிலும் எமக்கும், மற்றைய அவுஸ்திரேலியா வாழ் தமிழருக்கும் சேவையாற்றிய இந்தத் தமிழ் அறிஞரை நாம் இழந்து விழிநீர் வடித்து நிற்கின்றோம்.

அவர் விட்டுச் சென்ற சமூகப் பணிகளை தொடர்ந்து செய்தும், அப்பணிகளுக்கு பெருமை சேர்ப்பதுமே, நாம் அவருக்கு செய்யக்கூடிய கைமாறு. அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**
**AUSTRALIAN SOCIETY OF GRADUATE TAMILS (ASoGT)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேந்தனே உனக்கு விழிநீர்ச் சமர்ப்பணம்

தூய தமிழே
என்றுன்னை அழைக்கவா
துயில் கொண்ட தமிழே!

உயிரும் மெய்யும் உயிர்மெய்யும்
ஆயுதமும் கொண்ட மொழிஅமிழ்து தமிழே!

அ.்.தே போல் உயிர் மெய்யாய் ஒளிர்ந்த உந்தன்
உயிர்நீக்கி மெய்சாய்த்த ஆயுதமென்ன? ஐயகோ!
கோரமய்யா கொடூரமய்யா அந்தக் கொடும்பிளவை
குருதிதன்னைக் குடித்துவிட்டக் கோரநோய்!

கன்னல் தமிழே
என்றுன்னைக் கூப்பிடவா
கரைந்து விட்ட கண்ணீத்துளியே!

வெந்நீராய்ச் சொரிகிறது விழிநீர்
குரல்வற்றி இதயமே இசைக்கிறது சோககீதம்

கவிதையிலே வேந்தனாய் கலைகளிலே வித்தகனாய்
அகவைநூறு கடந்தாலும் கடமைகோடி செய்யவல்ல
ஆற்றல்மிகு தேற்றறிவாளன் கண்ணிமைக்கும் நேரத்தில்
காற்றினிலே கரைந்ததென்ன காணாமல் போனதென்ன?

அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவு...
கார்த்திகைத்திங்கள் ஹோம்புஷ் பள்ளி...
சுனாமி அலைகளாய்ச் சுழன்றன நினைவுகள்
சோகத்தின் விளிம்பினிலே நனைந்தன இமைகள்

இனிதான மாலைஅன்று இலக்கியவிழா வேளைஒன்று
கவியரங்கக் கூட்டமைப்பில் கவிஞர்களின் பாட்டமைப்பு
அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - இதுதலைப்பு

முதலாய்ப்படைக்க வந்த கவிதைக்கு
முன்னதாய்ச் சின்னஎன் முன்னுரை மொழிந்தேன்
முளைத்திட்ட கேள்வியினைக் கவிவழி பொழிந்தேன்

முடிகொண்ட மன்னன் அவன் சேரன் செங்குட்டுவன்
பாராண்டான் புவனம் வென்றான்
பெரும் அதிகாரம் படைத்தான்

முடிதுறந்த தம்பிஅவன் இளங்கோவடிகள்
சீராண்டான் செந்தமிழ் பயின்றான்
சீர்மிகு சிலப்பதிகாரம் படைத்தான்

முன்னவன் வேந்தன் பொன்முடி தரித்தான்
பின்னவன் ஈந்தான் தன்முடி துறந்தான் - ஆக
வேந்தனார் இங்கு செங்குட்டுவனே
ஈந்தனார்தான் இதில் இளங்கோவடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னெப்படி
வேந்தனார் இளங்கோ ஆகமுடியும்
இங்ஙனம் எழுந்தது என்னுள் கேள்வி

இப்படியும் இருக்கலாம்
அவர் புவி வேந்தனார் அல்ல கவி வேந்தனார்
இவரும் அப்படியே

செந்தமிழ்ப் புலமையில் இவரொரு சாத்தனார்
செழுந்தமிழ்ப் பாடல்கள் சீரொடு யாத்தனார்
புத்தகங்கள் பாடங்கள் திட்டமிட்டு ஈந்தனார்
இத்தகு வித்தகர்தாம் இளங்கோ வேந்தனார்

ஆனால் அவரங்கு வரவில்லை - ஆம்
குன்றிய உடல்நலம் கன்றிய குரல்வளம்
அவர் அங்கு வரவில்லை

ஆயினும் தமிழ்க்காதல் அணுவேனும் குறைவில்லை
ஆகவே அழகுக்கவிதை ஒன்றை பழகுதமிழில் ஆக்கி
அவர்தம் தனிக்குரலை அர்ச்சுன மணிக்குரலில்
ஒலிக்கவைத்தார் ஆர்வத்தால் சிலிர்க்கவைத்தார்

செப்பிய மொழிகள் மறுபடியும் வாராதோ
கப்பிய சோகம் கண்களில் மாறாதோ
ஏங்குகின்ற ஏக்கங்கள் தீராதோ
தூங்குகின்ற விழிகள்இனி பாராதோ

அவர் இதழ்கள் திறவாதா
அழகுமொழி பிறவாதா
இனிகவிதை போற்றுவோர் யார்
தமிழன்னை தேற்றுவோர் யார்

கடல்கொண்ட கபாடபுரத்தில்
தமிழ்ச்சங்கம் அழிந்தது
தமிழுக்கு அழிவில்லை

உடல்கொண்ட கூட்டினிலே
உயிர்ப்பறவை மறைந்தது
புகழுக்கு மறைவில்லை

அணையாத ஒளிவிளக்கே - இதயத்தில்
அழியாத சித்திரமே - உன்னை
நினையாத நாளில்லை - என்றும்
நிம்மதியாய் நீ உறங்கு

- த. கலைமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரமாய் நின்றவரே

பாலருக்கு தமிழ் கொடுத்தாய்
பாவலனாய் கவிகொடுத்தாய்
இலக்கியத்தில் சுவை கொடுத்தாய்
இமயமென நிமிர்து நின்றாய்

சிரித்தபடி பேசிநின்றாய்
சிந்தனைக்கு விருந்தளித்தாய்
பலரை அமர்த்தி வைத்து
பட்டிமன்றம் நடத்தி வைத்தாய்

விஞ்ஞானம் கற்று நின்றாய்
விரிவுரைகள் செய்துநின்றாய்
சிகரத்தின் நிகழ்ச்சியிலே
சிந்தனைகள் சொல்லிநின்றாய்

முத்தமிழின் வித்தகரே
முயற்சியின் உறைவிடமே
சத்தியத்தின் இருப்பிடமே
சரித்திரமாய் மாறிவிட்டீர்
சிகரமும் தலைசாய்த்து
தமிழரொடு வணங்கிறது.

**சிகரம் தமிழ் தொலைக்காட்சி நிறுவனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவ மன்றம்**
சிட்னி முருகன் கோயில்
தமிழ் கல்வி கலாச்சார நிலையம்

**The Saiva Manram Inc.**
Incorporated in NSW
217 Great Western Highway
Mays Hill NSW 2145
Phone: (02) 9687 1695
Fax: (02) 9687 8907

கலாநிதி வேந்தனார் இளங்கோ அவர்களின் மறைவு கேட்டு நாம் அனைவரும் பெரிதும் மனவருத்தம் அடைகிறோம். அன்னார், சைவப் பற்றாளர், சமூக சேவையாளர், தமிழ்க் கல்வியில் பெரும் ஈடுபாடுடையவர்.

இளங்கோ அவர்களுக்கும் சைவ மன்றத்துக்கும் மிகவும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. 1996ம் ஆண்டில் "சிட்னி முருகன் பாமாலை" நூல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டபோது இளங்கோ அவர்கள் அந்த வெளியீட்டுக்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார். மேலும் சிட்னி முருகன் கோயில் திருவிழா உபகுழுவிலே இணைப்பாளராகக் கடமையாற்றித் தொண்டு செய்தார்.

நமது இளைஞர் வட்டம் நடத்துகின்ற பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கியும், பங்கு பற்றியும் பணிபுரிந்தார். சிறுவரின் தமிழ், சைவக் கல்வியில் மிகுந்த ஆர்வம் உள்ள இவர், சைவ மன்றம் வருடந்தோறும் நடத்துகின்ற சமய அறிவுத் தேர்வுகளிலே, நடுவராக அமர்ந்து மன்றத்துக்கு ஆதரவு நல்கினார்.

இளங்கோ அவர்களுடைய மறைவு தமிழ்ச் சமுதாயத்துக்குப் பெரும் இழப்பு. ஆற்றொணாத் துயரத்தில் மூழ்கியிருக்கும் அவருடைய மனைவி, மக்கள், மற்றும் குடும்பத்தினருக்குச் சைவ மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாருடைய ஆன்மா சாந்தி அடைய முருகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

நா. கணபதிப்பிள்ளை
(செயலாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி இளங்கோ காலமாகி விட்டார் என்பதை உடனடியாக நம்ப மனம் மறுக்கிறது. அவர் சுகவீனமுற்றிருந்த வேளை சென்று பார்த்தபோது எங்களுடன் பேசினார். அவரது அதீத ஞாபக சக்தியில் எந்தவித குறைவும் தெரியவில்லை. அவருக்கேயுரிய தெளிவான பேச்சும், விடயங்களை நிதானமாக, ஒழுங்காக எடுத்துச் சொல்லும் திறனும் அப்படியே இருந்ததை அவதானித்தேன்.

கடந்த வருடம் பத்தாம் மாதம் நடைபெற்ற HSC தமிழ் (வாய்மொழி) பரீட்சைக்கு தடியூன்றி நடக்கும் நிலையில் இருந்தும்கூட சிரேஷ்ட பரீட்சகராக கடமையாற்ற வந்திருந்தார். சுழன்று ஓடி உற்சாகமாக உயிரினும் மேலாம் தமிழ்த்தாய்க்கு ஊழியம் புரிந்து கொண்டிருந்த ஒரு உத்தமனை அத்தகைய நிலையில் கண்டபோது நான் கலங்கிப்போனேன்.

அவரது பல்கலைக்கழக முழுநேர வேலைப்பழு, நெருக்குவாரங்கள் மத்தியிலும் கவியரங்கு, பட்டிமன்றம், கலந்துரையாடல், தமிழாசிரியர்கட்கான பயிற்சிநெறிகள் எங்கும் கலாநிதி இளங்கோவைக் காணக்கூடியதாக இருந்தது. எந்தக்களைப்பும் இன்றி மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்றினார். கலகலப்பாக பழகும் இனிமையான சுபாவம் கொண்ட ஒரு மென்மையான உள்ளம் கொண்டவராகவே நான் அவரைக் கண்டேன்.

ஆனால் அநீதிகளை எதிர்த்துப் பேசுவதில் அவர் காட்டிய துணிவையும், மனந்திறந்து உளசுத்தியோடு நேர்மையாக எதனையும் செய்ய முயலும் உறுதியையும் கண்ட போது வியந்திருக்கிறேன். ஒரு தலைவனின் இயல்புகளையும் கொண்டிருந்தார்.

தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் அன்னார் ஆற்றிய சேவை போற்றத்தக்கது. அது தன்னலமற்ற புனிதமான தொண்டு. தமிழ்க் கல்வி தொடர்பான வேலைகளில் அதிகளவு நேரத்தைச் செலவிட்டுள்ளார். அவர் தயாரித்திருக்கும் பாடத்திட்டங்கள், செயற்பாடுகள், வினாக்கள், மதிப்பீட்டு முறைகள் என்பவற்றைப் பார்க்கின்ற போதுதான் அவரது அர்ப்பணத்தின் தன்மை தெரிகின்றது.

இளங்கோ தமிழ் அறிவு நிரம்பிய குடும்பத்தில் பிறந்தவர், மின் பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர் (ஜேர்மன் மொழியில்), ஒரு கவிஞர். இவை காரணமாக இவரிடம் மொழி தொடர்பாக தொழில்சார் நிபுணத்துவம் காணப்பட்டது. சமூக மொழி கற்பிக்கும் ஆசிரியர்கட்கான மாநாடொன்றில் தமிழ் மொழி கற்பித்தலுக்கான மிகச் சிறந்த பாட அலகுகளை CD யில் தயாரித்து அவற்றினைக் கற்பிக்கும் முறைகள் பற்றி விளக்கி விரிவுரை ஆற்றினார். அந்த CD யினை கற்பித்தல் சாதனமாக உரிய முறையில் வெளியிடும் விருப்பத்தினையும் தெரிவித்தார்.

ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தில் கற்பித்தபோது அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எதனையும் சரியான முறையில் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்யும் திறமை அவரிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஆசிரியர்களுடன் நட்புடனும் கண்ணியமாகவும் தொடர்புகளை வைத்துக் கொள்வார். எங்களுடன் கோபமாகப் பேசியது கிடையாது.

தமிழ்ச் சமூகம் ஒரு அற்புத மனிதனை இழந்திருக்கின்றது. தலைவனை காலன் பறித்ததில் கதி கலங்கித் தவிக்கும் அன்னாரின் குடும்பத்தின் கவலையில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**குலம் சண்முகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈஸ்ட்வுட் தமிழ் கல்வி நிலையம்**
**EASTWOOD TAMIL STUDY CENTRE INC.**
**Postal Address: P O Box 551, Eastwood, NSW 2122**
ABN: 39 621 214 904

கடந்த ஒரு தசாப்த காலத்திற்கும் மேலாக, சிட்னியின் தமிழ் கல்வி நிலையங்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் கலாநிதி இளங்கோவினது பங்களிப்பு மிக அபரிமிதமானது.

கற்கை நெறிகளிலும் பாட நூலாக்கத்திலும் பாரிய உழைப்பினால் உருவான பாடத்திட்டத்திலும் அவரது தனித்துவமான முத்திரைகள் நன்கு பதிந்திருப்பதை காணமுடியும். அவர் இல்லாவிடில் இவை யாவும் எப்படிச் சாத்தியமாயிருக்கும்?

தேவை எனக் கேட்கும்போதெல்லாம் கிடைக்கும் அவரது அரிய ஆலோசனைகளையும், அறிவுபூர்வமான பங்களிப்புகளையும், • எமது கல்வி நிலையங்கள் இன்று இழந்து நிற்கின்றன. இனி இந்த இடத்தை இட்டு நிரப்ப வல்லவர் யார் உள்ளார்? தமிழ் கல்வி பற்றிய இவரது அறிவையும் அனுபவத்தையும் இன்னொருவர் வளர்த்துக்கொள்ள எத்தனை வருடங்கள் எடுக்கும்?

எல்லோரையும் கவரத்தக்க, எளிய நடையிலான அவரது இனிய மேடைப் பேச்சுக்களையும், கணீரென்று குரலையும் இனி யாரிடம் கேட்டகப் போகின்றோம்? ஆனாலும் கலாநிதி இளங்கோவினது நினைவுகள், அவரது படைப்புகளினூடாகவும், பங்களிப்புகளுக் கூடாகவும் நீண்ட காலம் எம்முடன் நிலைத்து நிற்கும்.

அமரர் இளங்கோவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கிறோம்.

- பேற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Auburn தமிழாலயத்தின் கண்ணீர் அஞ்சலி

புலம் பெயர் மண்ணில், கலாச்சாரச் சிக்கல்கள் நிறைந்த வாழ்வில், தமிழ் மொழியை மங்கவிடாமல் வைத்திருந்து, அடுத்த தலைமுறைக்கு அதை ஊட்டிவிடும் பணி மகத்தானது. இனத்தின் வளர்ச்சிக்கு தமிழ் கல்விக்கூடங்களும், ஆசிரியர்களும் ஆற்றும் பணி ஆணிவேரை வலுவடையச் செய்கின்றது. அத் தமிழ் மொழிக் கல்விக்கு நெறிமுறையை வகுத்துக் கொடுப்பதில் முன்னின்று உழைத்து, தந்தை வழி பெற்ற தமிழறிவை தான் வாழும் புலம் பெயர் மண்ணுக்கும் ஊற்றிவிட்டு உறங்கும் கலாநிதி வேந்தனார் இளங்கோ அவுஸ்திரேலியத் தமிழ் வரலாற்றில் நிலைத்திருக்க வேண்டியவர்.

2002ம் ஆண்டில் இக் கல்வி நிலையத்தின் தலைவர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட சமயத்தில் எனக்கு வழிகாட்டியதை நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

ஓபன் தமிழாலயத்தின் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் சார்பில் எனது அஞ்சலியை நன்றியுணர்வோடு சமர்ப்பிக்கின்றேன்.

இங்கனம்

கணேசன் மேகநாதன
தலைவர்
ஓபன் தமிழாலயம்



மிக குறுகிய கால அவகாசத்தில் இரங்கல் செய்திகளை அனுப்பி வைத்த தனிப்பட்டவர்களுக்கும் அமைப்புக்களுக்கும் இலக்கிய பவர் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் எம்முடன் இளங்கோ

எதிரும் புதிருமாய் எத்தனை களங்களில் ஆடினோம்
அறிமுகம் கூட மோதலில்தான்
ஆனதாக ஒரு ஞாபகம்
கவியரங்கு, விவாதரங்கு, கருத்தரங்கு
கட்டுப்பத்தையையும் தாண்டி
கொழும்பு நகரெங்கும்
உன்குரல் அதிர்வலைகளை எழுப்பிய காலமது.
அரசியல் வேறானாலும்
கொண்ட கொள்கைக்காக
உயிரையும் தருகின்ற வலிமை வாய்த்ததனால்
மலையினை நிகர்த்த மதிப்பு வளர்ந்தது
காலம் செல்ல கோலங்கள் மாறியது
கொள்கைகளுக்கு அப்பால்
இனிய தமிழ் எம்மை இணைக்க உதவியது.
பின்னால் சிட்னிக்கு வந்த உன்னை
தமிழ் அரங்குகளில் அறிமுகம் செய்யும் வாய்ப்பு
முன்னால் வந்த எனக்கு வாய்த்தது
தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பிலும்
இலக்கிய பவரிலும் இணைந்து பணியாற்றினோம்.
புதுமையினை தமிழில் பாச்சும்
வேட்கைக்கும் வேகத்திற்கும் அணைபோட்டு
பழமையின் வலிமைகளை பேணும் வழி செய்தாய்.
சரி எனப் பட்டதற்க்காய்
சளைக்காது போராடும் உழைப்பாளியானாய்
எடுத்த கருமத்தை
எழிலோடும் வனப்போடும் நிறைவாயும்
இயற்றும் வல்லமை பெற்றாய்
கலக்கமில்லாது கடைசி மூச்சுவரை
தமிழின் இருப்பை உறுதிசெய்யும்
நினைப்பில் நீ வாழ்ந்தாய்
இந்த மாநகரில் இனிய தமிழ்
என்றும் வாழும் வழி செய்தாய்
ஆதலால் நீ
இன்றும் எம்முடன் வாழ்கிறாய்

அ.சந்திரகாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்னி தமிழ் அரங்கக் கலைகள் + இலக்கிய பவர்
Sydney Tamil Performing Art and Literary Academy

இந்த நாட்டில் காலடி வைத்த நாள் முதல் இலக்கியப் பவரின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கியவர் கலாநிதி இளங்கோ. குறிப்பாக சில வருடங்களுக்கு முன்னர் இலக்கிய பவரினால் ஒழுங்குசெய்யப்பட்ட நாடக பட்டறையில் இவரின் பங்கு பிரதானமானது.

அவரின் பொதுவாழ்வில் அதிக நேரத்தையும் ஈடுபாட்டையும் தமிழ் மொழிக்கல்வி ஆக்கிரமித்த போதும், ஒரு கவிஞன் என்ற வகையில ஆக்க இலக்கியத்திலும் அவரின் பங்களிப்பு நிறையவே இருந்துள்ளது. ஒரு முழுநேர ஊழியரால் இயலக்கூடிய அளவிற்கு மேலாக அவர் தமிழ்மொழி, கலை கலாசாரத்திற்காகப் பணி புரிந்ததை அவருடன் நெருங்கியவர்கள் உணருவர். அவர் மொழி மீது கொண்ட அழியாத காதலும் பற்றுதலுமே அதை சாத்தியமாக்கிற்று.

மரபு பேணுதலில் தீவிரவாதியான இவர் ஏந்த விசத்தையும் ஆழமாக ஆராயும் பக்குவமுடையவராகவும் இருந்தார். மரபு என்பதற்காக கண்மூடித்தனமான நம்பிக்கைகள் சடங்குகளை விடாப்பிடியாக கடைப்பிடிக்கும் தமிழ் சமூகத்தை சாடவும் அவர் தயங்கவில்லை.

கலாநிதி இளங்கோவினுடைய இழப்பு ஈடுகட்டக் கூடியதல்ல என்பதை சிட்னி தமிழ் சமூகம் ஆழ்ந்த கவலையுடன் உணருகின்றது. குறிப்பாக தமிழ்க் கல்வியில் அவர் ஆற்றிய பணியை வேறு எவரிடமுமிருந்தும் நாம் எதிர்பார்க்க முடியாது. அந்த வகையில் எமக்கு நாமே ஆறுதல் கூறுவதோடு தலைமகனை இழந்த தவிக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்தக் கொள்ளுகின்றோம்.

பவர் அங்கத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org